# மக்கள் வீரன் செம்புலிங்கம்: அதிகாரமும் வெளியும் தலைகீழாக்கமும்

வேலுசாமி நரேஷ்

*சுயாதீன ஆய்வாளர், கல்வியாளர், தட்வா உயர்நிலைப் பள்ளி, இந்தியா*

**முன்னுரை**

ஒவ்வொரு காலகட்டத்திலும், வெளியும் அதற்கான எல்லையும் தொடர்ச்சியாக மாறிக்கொண்டே இருக்கின்றன. மனிதனுடைய அரசியல், பண்பாடு சமூக மாற்றங்கள் அனைத்தும் இந்த வெளியையும் எல்லையையும் அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. மனிதன் எப்பொழுதும் தன்னுடைய அடையாளத்தை வெளியுடன் இணைத்தே வெளிப்படுத்துகிறான். ஒரு வெளியைப் பயன்படுத்துவது என்பது அதிகாரத்தின் வெளிப்பாடாகப் பார்க்கப்படுகிறது. ஒருவரின் அதிகாரம், சுதந்திரம் என்பதும் இந்த வெளிக்குள் மட்டும் இயங்கக்கூடியதாக இருக்கிறது. இங்கு வெளி என்பதைப் பலவாறு கூறலாம், குடும்ப வெளி, சடங்கு வெளி, சமூக வெளி முதலியவை. இந்த வெளி ஒவ்வொன்றும் அதற்கே உரித்தான அதிகாரப் படிநிலையைக் கொண்டிருக்கும். இந்த அதிகாரப் படிநிலையை அந்த வெளிக்குள் இருக்கும் ஒருவர் மீறினாலோ அல்லது வெளிக்குள் இருக்கும் அதிகார கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்த விரும்பினாலோ அந்த வெளியின் அதிகார மையத்தால் தண்டிக்கப்படுகிறார். நேரடியாகவோ மறைமுகமாகவோ வெளி மனிதர்களின் செயல்பாடுகளையும் சுதந்திரத்தையும் இது கட்டுபடுத்துகிறது. ஆகையால், அதிகாரவர்க்கம் எப்பொழுதும் வெளியைத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முனையும்.

இந்த வெளிக்குள் தங்களுடைய அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்கும் அல்லது அதிகாரக் கட்டமைப்புக்கு எதிரான மரபை உடைய எதிர்ப்புக் குரல்கள், நூல்கள், எழுத்துப்பிரதிகளை அனுமதிப்பதில்லை. எதிர்காலத்தில் இத்தகைய சூழல் ஏற்படாமல் இருப்பதற்காக அதை நினைவுபடுத்தும் அனைத்தையும் அந்த வெளியிலிருந்து அழித்துவிடுவார்கள். அவ்வாறு வெளியிலிருந்து அழிக்கப்பட்டவர்களின் எதிர்ப்புக் குரல்களும் உரிமைக்கான போராட்டமும் வாய்மொழி கதைகள், பாடல்கள், சடங்கு நிகழ்வுகள், வழிபாடு போன்ற மக்களின் செயல்பாடுகளின் வழியாகத் தங்களுடைய இருப்பைத் தக்கவைத்துக் கொள்கின்றன. அப்படி, திருநெல்வேலிப் பகுதியில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கொடூரமான கொள்ளையனாக அடையாளப்படுத்தப்பட்ட சமூகம்சார் கொள்ளையனான செம்புலிங்கத்தை இந்த அதிகார வெளி எப்படி மாற்றியது, அவர் இந்த அதிகார வெளியைத் தன்னுடைய கொள்ளைச் செயல்பாடு மூலம் எப்படி மாற்ற முயன்றார் என்பதையும் விரிவாக ஆராய முயல்கிறது. சமூக வெளியில் கட்டமைக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் எப்படிப் படிப்படியாக அந்த வெளியைத் தனதாக்கிக் கொள்ள முயன்று ஒரு மக்கள் நாயகர்களாக உருவாகுகின்றனர். இந்த வளர்ச்சி நிலை எப்படி அமைந்திருந்தது என்பதைச் செம்புலிங்கம் பற்றிய வாய்மொழி மற்றும் எழுத்து ஆவணங்கள் மூலம் இக்கட்டுரையில் விரிவாக விவாதிக்கப்பட்டிருக்கின்றது.

**முன்னாய்வுகள்**

நா. வானமாமலை கட்டபொம்மன் கதைப்பாடலைப் புத்தகமாகப் பதிப்பித்தபொழுது அந்தப் புத்தகத்தின் முன்னுரையில் வாய்மொழி இலக்கியங்கள்(கட்டபொம்மன் இறப்புக்கு முன்பு பின்பு) வெளிவந்த அச்சு ஆவணங்கள் ஆகியவற்றை ஒப்பிட்டு கட்டபொம்மன் வரலாறு எவ்வாறு ஒவ்வொருவர் பார்வையிலும் கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒப்பிட்டு விளக்கியிருப்பார். கட்டபொம்மன் ஆட்சிக்கு பிறகு ஏற்பட்ட காலனிய அதிகாரிகளின் அடக்கு முறையும் ஊமத்துரை இப்போராட்டத்தை மக்களிடத்தில் கொண்டு சென்று மக்கள் போராட்டமாக மாற்றிய காரணத்தினால் பாளையக்காரனாகவும் மக்களை ஒடுக்கும் ஆட்சியாளனாகப் பார்க்கப்பட்ட கட்ட பொம்மன் மக்கள் நாயகனாகவும் விடுதலை வீரனாக மாறியதையும் விரிவாக விளக்குகிறார். இது ஒரு முக்கிய முன்னோடி வாசிப்பாகக் காணப்படுகின்றது.

**முதன்மைத் தரவுகளும் நெறிமுறையும் அணுகுமுறையும்**

இவ்வாய்வுக் கட்டுரையில் சமூகவியல் மற்றும் விளக்க முறை ஆய்வு முறைகளைப் பயன்படுத்தப்படுத்தி செம்புலிங்கம் பற்றிய ஆய்வு நூல்கள், நாவல்கள், பெரிய எழுத்துப் பிரதிகள், அரசு ஆவணங்கள் வழியாகச் செம்புலிங்கம் என்ற நாயகன் எப்படி உருவாகுகிறான், அவன் எப்படி தற்காலிகமாக வெளியைக் கட்டுபடுத்தி அதிகார தலைகீழாக்கம் செய்கிறான் என்பதும் விளக்கப்பட்டிருக்கின்றன.

**செம்புலிங்கத்தின் பரிணாம வளர்ச்சி**

கட்டபொம்மன் வரலாறு போன்றே செம்புலிங்கத்தின் வரலாறும் சாதாரண ஒரு மனிதன், இயல்பான வாழ்க்கை என்ற நிலையிலிருந்து ஒரு சமூகம்சார் கொள்ளையர், மக்கள் வீரனாகப் பரிணாம வளர்ச்சியடைகிறது.

அவர் கோனவிலைப் புதூர் பகுதியில் தனது தந்தையுடைய கருப்பட்டி வியாபாரம் தொழிலைச் செய்து வந்த சாதாரண மனிதர். சிட்டலாங்கிணறு, கொட்டாரக் கொள்ளை செம்புலிங்கத்தின் தலைமையில் நடைபெற்றதாகச் சித்திரிக்கப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்படும் சூழலில் செம்புலிங்கம் தலைமறைவாகிறார். தொடக்கத்தில் தங்களுடைய அன்றாட உணவுத் தேவைக்காகக் கொள்ளையடிக்கும் இவர் பின்னர் தங்களுக்கு உதவுபவர்களுக்கும் ஏழைகளுக்கும் பண உதவி செய்கின்றார். இது அவரைப் பிரபலப்படுத்துகின்றது. அதேவேளை காலனிய அரசுடனும் அதிகாரிகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த அதிகார மையத்தைச் சார்ந்த வீடுகளில் கொள்ளையிடுதல் வாயிலாக அவர் அதிகார வர்க்கத்தின் மத்தியில் அச்சம் ஏற்படுதினார். காலனிய காவலர்கள் மத்தியிலும் செம்புலிங்கம் பற்றிய ஒரு அச்சம் நிலவியது. இந்த இரண்டும் செயலும் சமூகம் சார் கொள்ளையராக இருந்த செம்புலிங்கத்தைக் காலனிய முகவர்களுக்கு எதிராகப் போராடிய சுதந்திர போராட்ட வீரராக மாற்றியது.

**சுதந்திரப் போராட்டத்தில் கொள்ளை**

சுதந்திரப் போராட்டக் காலத்தில் காலனிய அரசுக்கு எதிரான தங்களில் எதிர்ப்பைக் காட்டும் ஒரு வழியாகவும் அவர்களின் அதிகாரத்தைப் பலவீனப்படுத்தும் ஒரு செயலாகவும் கொள்ளை

என்பது பலரால் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. இந்தக் கொள்ளை நிகழ்வானது வெளி மீது காலனிய அரசு கொண்டிருந்த அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறது.

அதிகாரமற்றவன் தன்னுடைய உரிமையைப் பெறுவதற்காக, வறுமையைப் போக்குவதற்காகத் தன்னைச் சுரண்டுபவர்களிடமிருந்தோ அதிகாரம் செலுத்துபவர்களிடமிருந்தோ எடுத்தால் அதை இந்தச் சமூகம் கொள்ளையாகக் கருதுகிறது. இச்செயலைச் செய்பவரைத் தீயவராகவும் கொடூரமானவராகவும் காட்டுகிறது. இவ்வாறு ஆதிக்கவாதிகளால் கொடூரமானவராகவும் கொள்ளையராகவும் பார்க்கப்பட்ட செம்புலிங்கம் உழைக்கும் மக்களால் வட்டார நாயகனாகவும் அவருடைய செயல் அதிகார எதிர்ப்பின் வெளிப்பாடாகவும் பார்க்கப்பட்டது.

சென்னை மாகாணத்திலிருக்கும் திருநெல்வேலியிலும், தென் திருவிதாங்கூர் சமஸ்தானத்திலும் சில ஆண்டுகள் மட்டுமே கொள்ளைகளைச் செய்துவந்த செம்புலிங்கத்தின் புகழ் எப்படிச் சென்னை முதல் மலையாளத் தேசம் வரை பரவியது என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. சென்னை மாகாணத்தில் ஒரு சிறிய ஊரில் பிறந்த செம்புலிங்கத்தைப் பற்றிய முச்சந்தி இலக்கியம் 1921, 1922 ஆண்டுகளில் சென்னையில் விற்கப்படுகிறது. அவரைப் பற்றிய பாடல்கள் தொடர்வண்டி நிலையங்களில் பாடப்பட்டிருக்கின்றன. 1982இல் மலையாளத்தில் செம்புலிங்கத்தைப் பற்றி ஒரு படம் வெளிவந்திருக்கிறது. இவைதான் செம்புலிங்கத்தை மற்றைய கொள்ளையரிடமிருந்து தனித்துவம் மிக்கவராகக் காட்டுகிறது.

**செம்புலிங்கம்**

அச்சுப்பிரதிகளில் காணப்படும் பிரதிகளை வைத்து பார்க்கும் பொழுது செம்புலிங்கம் ஏழைகளுக்கு உதவுபவர் ஆனால், செம்புலிங்கத்தினால் கொள்ளையடிக்கப்பட்ட பண்ணையார்களுக்கும் நிலச்சுவான்தாரர்களுக்குச் செம்புலிங்கம் கொள்ளையர். இது எரிக்ஸ் ஹாப்ஸ்பாம் குறிப்பிடும் சமூகம் சார் கொள்ளையருக்கான வரையறையுடன் பொருந்துவதாக இருக்கிறது. அவர் சமூகம் சார் கொள்ளையன் பற்றி நீண்ட வரையறையைக் குறிப்பிட்டிருப்பார், அவற்றில் முக்கியமானது 'சார்ந்த குழு அல்லது ஊருக்கு நல்லவனாகவும் அவனால் கொள்ளையடிக்கப்படுபவர்களுக்குக் கெட்டவனாகவும் தோற்றமளிப்பான்' என்பது.

செம்புலிங்கத்தைச் சமூகம் சார் கொள்ளையர் என்ற தன்மைக்குள் மட்டும்தான் வைத்து பார்க்க முடியுமா? செம்புலிங்கத்தின் செயல்பாட்டை ஏழைகளிடமிருந்து பணத்தைக் கொள்ளையடித்து ஏழைகளுக்குக் கொடுக்கக் கூடியவர் என்ற ஒற்றைத் தன்மையில் அடைக்க முடியாது. ஏன் என்றால் செம்புலிங்கத்தைப் பண்ணையார்களும் நிலச்சுவான்தாரர்களும் மட்டும் எதிரியாக நினைக்கவில்லை காலனிய அரசும் எதிரியாக நினைத்தது. செம்புலிங்கம் பண்ணையார்களிடம் கொள்ளையடித்தார் அதனால் அவர்கள் செம்புலிங்கத்தை எதிரியாக நினைத்தார்கள். ஆனால், செம்புலிங்கம் காலனிய அரசின் எந்த ஒரு பொருளையும் கொள்ளையடிக்கவில்லையே பின்பு எதற்காகச் செம்புலிங்கத்தைக் காலனிய அரசு எதிரியாகப் பார்த்தது. இங்கு இரு விடயங்கள் நோக்கத்தக்கன. ஒன்று செம்புலிங்கம் காலத்தில் வெளியின் மீது அதிகாரம் கொண்டவர்களாகக் காலனிய அரசு இருந்தது. இரண்டாவது காலனியக் காலத்தில் வசதிபடைத்தவர்கள் தங்களின் அதிகாரத்தையும் சொத்தையும் பாதுகாப்பதற்காகக் காலனிய அதிகாரிகளின் ஆணையை ஏற்று அதை மக்களிடத்தில் செயல்படுத்தும் செயலை செய்தனர். இவற்றைப் பாளையக்காரர்கள் ஆட்சியில் தெளிவாகக் காணலாம் எட்டயபுரம் போன்ற பாளையக்காரர்கள் தங்கள் ஆட்சி

அதிகாரத்தைப் பாதுகாப்பதற்காக ஆங்கில அரசு கூறிய அனைத்தையும் செய்தனர். இதே போன்றுதான் இந்தியச் சாதிய அடுக்கமைவில் அதிகாரத்தை வைத்திருந்த சாதிகள் காலனிய அரசுக்கு முகவர்களாச் செயல்பட்டனர். காலனிய அரசு செய்த சுரண்டல், அடக்குமுறை அனைத்தும் இவர்கள் வழியாகச் செய்தனர். இந்த முகவர்கள் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்கள் மீது பல அடக்குமுறைகளையும் கொடுமைகளையும் செய்தனர். சமூகத்தில் சாதிய ரீதியாக நடைபெற்ற அடக்குமுறையை எதிராகக் கேள்வி கேட்டவர்களை, தங்கள் உரிமைகளைக் கேட்டவர்களைக் குற்றவாளியாக்கினர் அல்லது கொலைச் செய்தனர்.

இத்தகைய தன்மையைத் தமிழ்ப் பண்பாட்டு மரபு முழுவதும் பார்க்க முடியும். எப்பொழுதெல்லாம் வெளியின் அதிகார அடுக்கமைவில் கீழ் இருப்பவர்கள் அதிகாரக் கட்டமைப்பை உடைக்கும் பொழுது, அதிகாரத்தைப் பங்கிடும் பொழுது அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் வெளியின் அதிகாரக் கட்டமைப்பு அவர்களை ஏதாவது குற்றம் சுமத்தி, சதி செய்து கொன்றுவிடும். காத்தவராயன் கதை (சாதிய கட்டமைப்பை மீறி திருமணம் செய்தல்), மதுரைவீரன் கதை (அதிகார பகிர்வு), வண்ணார மாடன் கதை (சாதிய கட்டமைப்பை மீறி திருமணம் செய்தல்), சின்னத்தம்பி கதை (அதிகார பகிர்வு) ஆகியவை இவற்றிற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இதன் தொடர்ச்சியாகத் தான் நாம் செம்புலிங்கத்தையும் பார்க்க வேண்டும். செம்புலிங்கத்தின் செயல் அவருடைய பகுதியில் இருந்த சாதிய அதிகார கட்டமைப்பை ஆட்டம் காணச் செய்திருக்கிறது. செம்புலிங்கம் வாழ்விலும் இதன் பரிமாணத்தைக் காணமுடியும். சாதிய உயரடுக்கினர் செம்புலிங்கத்தின் அதிகாரத்தினால் அவரைப் பகைக்காது இருந்தமை பற்றி செந்திவேலு குறிப்பிட்டுள்ளார் (வெ. செந்திவேலு, 2007: 131–132).

செம்புலிங்கத்தினால் நடத்தப்பட்ட நம்பிக்குறிச்சி பண்ணையார் வீட்டுக் கொள்ளை, சிங்கிகுளம் ஐயர் வீட்டுக் கொள்ளை, தத்தனேரி அரிசி மூட்டைக் கொள்ளை ஆகியவை சாதிய அதிகாரப்போக்கைக் கடைப்பிடிப்பவர்களுக்கும் மக்களைச் சுரண்டி பிழைப்பவர்களுக்கும் எதிராக நடைபெற்ற கொள்ளைகளாக வெ. செந்திவேலு குறிப்பிடுகிறார்.

மேற்கண்டவற்றிலிருந்த செம்புலிங்கம் வாழ்ந்த சென்னை மாகாணப் பகுதிகளில் சாதிய அடக்குமுறை நிகழ்வுகள் எவ்வாறு இருந்தன என்பதைத் தெளிவாக விளக்குகிறது. இக்காலக் கட்டத்தில் தான் செம்புலிங்கம் சுதந்திரமாகப் பேருந்துகளில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவரைச் சாதியைச் சொல்லித் திட்டவோ, பேருந்திலிருந்து கீழ் இறக்கி விடவோ யாருக்கும் தையிரியம் இல்லை. அதிகாரத்தை வைத்திருந்தவர்கள் நேரடியாகத் தங்கள் எதிர்ப்பையோ வெறுப்பையோ காட்டாமல் இருந்தாலும் செம்புலிங்கதிற்கு எதிரான செயலில் மறைமுகமாக ஈடுபட்டு வந்தனர். செம்புலிங்கம் பற்றி வெளிவந்த மலையாளத் திரைப்படமான ஜம்புலிங்கத்தில் செம்புலிங்கம் கொள்ளையராகக் காட்டப்படவில்லை. பண்ணையாரின் அதிகாரப் போக்குச் சுரண்டலுக்கு எதிராகப் போராடும் ஒரு உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவராகக் காட்சிப்படுத்தியிருப்பார்கள். இப்படத்தில் பண்ணையார்(மாடம்பி)க்குச் செய்துகொடுக்கும் வேலைக்குக் கூலி வாங்கக்கூடாது. இதே போன்று சந்தையில் பொருட்கள் விற்கும் பொழுது பண்ணையாருக்கு வரிப்பணம் கொடுக்க வேண்டும். ஒரு நாள் செம்புலிங்கத்தின் நண்பன் முத்தையனின் தாய் வரிப்பணம் கொடுக்க முடியாததால் அவரிடம் இருக்கும் பொருட்களை வலுக்கட்டாயமாக எடுத்துச் செல்கிறார்கள். இதைப் பார்த்த செம்புலிங்கம் அவர்களுடன் சண்டையிட்டுப் பொருட்களை மீட்கிறார். இதனால், செம்புலிங்கம்

வரிப்பணத்தைக் கொள்ளையடித்ததாகக் குற்றம் சாட்டுகிறார்கள். இதில் ஏமி கார்மைக்கேல் அம்மையாரின் பெயர் ஜெயின் என்று மாற்றப்பட்டிருக்கும். செம்புலிங்கத்தின் நண்பனின் பெயரான காசி, முத்தையனாக மாற்றப்பட்டிருக்கும். இத்திரைப்படத்தில் சாதிய அடக்குமுறைக்கு எதிராகப் போராடி மாற்றத்தைக் கொண்டுவந்தவராகச் செம்புலிங்கம் காட்சிப்படுத்தப்பட்டிருப்பர்.

அதேவேளை செம்புலிங்கம் போன்ற வட்டார வீரர்கள் நேரடியாகக் காலனிய அரசை எதிர்க்காவிட்டாலும் அவர்களின் முகவர்களாக இருந்த உள்ளூர் அதிகார வர்க்கத்தை எதிர்ப்பதன் வாயிலாகவும் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்த காலனியக் காவல் துறையினரிடம் சிக்காமல் அவர்களை அச்சம் கொள்ளச் செய்ததன் வாயிலாகக் காலனிய அதிகாரத்தின் மூலம் தங்களின் சாதிய அதிகாரத்தைத் தொடர்ச்சியாகத் தக்கவைத்தவர்களின் அதிகாரத்தையும் வெளிப்படையான அடக்குமுறையையும் கேள்விக்குள்ளாக்கினார். செம்புலிங்கம் பற்றிய அச்சு நூல்கள் செம்புலிங்கத்தின் கொள்ளையைப் பற்றிக் குறிப்பிடும் அதே வேலையிலே செம்புலிங்கத்திற்குச் சுதந்திர போராட்ட வீரர்களுக்கு இடையே இருந்த தொடர்பு பற்றி இரண்டு இடங்களில் குறிப்பிடுகின்றன. வெ. செந்திவேலு, செம்புலிங்கம் சுதந்திரப் போராட்ட வீரரான தியாகி விஸ்வநாததாஸ் மீது மிகுந்த மரியாதை கொண்டிருந்ததாகவும் அவர் செம்புலிங்கம் இருந்த பகுதிகளில் நாடகம் நடத்தும் பொழுது செம்புலிங்கம் அந்த நாடகத்திற்கு மாறுவேடத்தில் வந்து விஸ்வநாததாஸ்•டன் பேசியதாகக் குறிப்பிடுகிறார்(வெ. செந்திவேலு, 2007: 232). புரட்சி வீரர் மூவர் நாடகத்தில் செம்புலிங்கத்தைச் சுதந்திர தாகம் கொண்டு ஏகாதிபத்திய அந்நிய ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் போராடிய புரட்சியாளராகச் சித்திரிக்கப்படுகிறது(வெ. செந்திவேலு, 2007: 11)

**மிஷனரிகள் பார்வையில் செம்புலிங்கம்.**

செம்புலிங்கத்தை மிஷனரிகள் அப்பாவியாகவும் செய்யாத குற்றத்திற்காகக் குற்றவாளியாக்கப்பட்டவனாகவும் கருதினர். மிஷனரிகள் செம்புலிங்கம் பற்றிய செய்திகளையும் அவரின் செயல்களையும் பற்றி உழைக்கும் மக்களின் வழி அறிந்தனர். ஏமி கார்மைக்கேல் அம்மையார் தன்னுடைய சுயசரிதையில் பல்லக்கு தூக்கிச் செல்பவர்கள் உழைத்த களைப்புத் தெரியாமல் இருப்பதற்காகச் செம்புலிங்கத்தின் செயல் குறித்துப் பாடியதாகவும் அதன் வழியாகத்தான் செம்புலிங்கம் பற்றித் தான் அறிந்ததாகவும் குறிப்பிடுகிறார். ஏமி கார்மேக்கேல் அம்மையார் செம்புலிங்கத்திடம் நேரடியாகப் பேசி அவர் பக்கம் இருக்கும் நியாத்தையும் ஏன் அவர் எப்படிக் கொள்ளையர் தலைவராக மாறினார் என்பதைக் கேட்டு அறிந்து கொண்டார்.

அவன் கொள்ளையின் மூலம் எவ்வளவு நன்மைகள் செய்தாலும் அவன் ஒரு திருடன் தானே அவனது பாவத் தொழில் அல்லவோ உலகம் புகழ்ந்தது. அக்கிரமத்தைப் புகழ்வதும் ஒரு பாவமே என்று யூ. ஹாப்கின்ஸ், குறிப்பிட்டிருக்கிறார். (1982:25)

இதே போன்ற ஒரு எண்ணம் ஏமி கார்மைக்கேல் அம்மையாரிடமும் இருந்தது. இதனால்தான் அவர் தொடர்ச்சியாகச் செம்புலிங்கத்திற்குப் போதனைகள் செய்து இந்தக் கொலை கொள்ளையை விட்டு விட்டு இறைவனிடம் தஞ்சமடையும்படி கூறினார். செம்புலிங்கம் சிறையில் இருக்கும் பொழுது ஏமி கார்மைக்கேல் அம்மையாரின் போதனைகளைத் தொடர்ச்சியாகக் கேட்டார். ஏசுவை முழுமையாக நம்பத் தொடங்கிய செம்புலிங்கம் அம்மையாரிடம் ஞானஸ்தானம் பெற்றுக் கொண்டு ஒரு கிறித்துவராக மாறினார்.

**அரசு ஆவணம்**

நாங்குனேரி காவல் நிலையத்தில் செம்புலிங்கம் பற்றிப் பதிவு செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை. இந்தக் குற்றப்பத்திரிக்கையின் வாயிலாகச் செம்புலிங்கத்தின் செயல்பாடுகள் 1919 முதல் 20.09.1923 வரை மூன்று ஆண்டுகள் அப்பகுதிகளில் இருந்திருப்பதை அறியமுடிகிறது. இக்குற்றப்பத்திரிகைத் தவிர வேறு எந்த ஆவணங்களிலும் இது போன்று ஆண்டுகள் குறிப்பிடப்படவில்லை.

இந்தக் குற்றப்பத்திரிகையில் செம்புலிங்கம் பிறந்து வாழ்ந்த பகுதியில் சட்ட விரோதமாகக் காட்டுகளிலிருந்து மரங்களை வெட்டி வருவதும், வேட்டையாடுவதும் இயல்பானதாகக் காணப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும், இப்பகுதியில் வேட்டையாடுவதற்காகக் கள்ளத் துப்பாக்கியைப் பயன்படுத்தினர். இத்தகைய சூழலிருந்த செம்புலிங்கம் இளம் வயதில் சட்டத்திற்குப் புறம்பான வேட்டையாடுதலில் ஈடுபட்டான். அவனுடைய சட்டத்திற்குப் புறம்பான செயல் வேட்டையாடுதலில் தொடங்கிப் பெரிய குற்றமாக மாறியதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

செம்புலிங்கம் பற்றிய வாய்மொழிக் கதைகள், பெரியெழுத்துப் பிரதிகள், ஏமி கார்மைக்கேல் அம்மையார் எழுதிய குறிப்பு, யூ. ஹாப்கின்ஸ் செம்புலிங்கம் பற்றிய குறு நூல், வெ. செந்திவேலுவின் வாய்மொழித் தகவல்கள் அரசு ஆவணங்கள் அடிப்படையில் எழுதப்பட்ட நூல் ஆகியவற்றில் செம்புலிங்கம் நல்லவனாகவும் தவறுதலாகக் கொள்ளையனாக மாற்றப்பட்டதாகக் குறிப்பிடுகிறது. செம்புலிங்கத்தின் கொள்ளையாகக் கருதப்படும் கொட்டாரத் தீவட்டிக் கொள்ளை என்பது அனைத்து ஆவணங்களிலும் வாய்மொழி இலக்கியத்திலும் பொதுவானதாகக் காணப்படுகிறது. ஆனால், செம்புலிங்கம் அக்கொள்ளைக்கு எப்படிச் சென்றான் என்ற காரணம் மட்டும் இந்தக் குற்றப் பத்திரிக்கையிலிருந்து வேறுபடுவதாக இருக்கிறது. குற்றப் பத்திரிக்கையில் செம்புலிங்கத்தின் தலைமையில் இந்தக் கொள்ளை நிகழ்வு நடைபெற்றதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், வெ. செந்திவேலு எழுதிய நூலில் இம்முடிவு கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது (வெ. செந்திவேலு, 2007: 71).

மேலும் ஆய்வாளர், அரசு ஆவணத்தில் இருப்பது போன்று இந்தக் கொள்ளை என்பது செம்புலிங்கத்தின் தலைமையில் நடைபெற்றது இல்லை. இந்தக் கொள்ளைக்குக் காரணம் ஹரிஹரபுத்திரனுக்கும் சிவசங்கரனுக்கும் இடையே பணம், அதிகாரப் போட்டி. சிவசங்கரன் தான் வீரலிங்கம் குழுவுக்குப் பணம் கொடுத்து அழைத்து வந்து இந்த நிகழ்வை நடத்தியது. இங்குக் கொள்ளையர்கள் பணக்காரர்களில் அதிகாரச் சண்டையில் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனர். இங்கு இவர்களைப் பயன்படுத்திய சிவசங்கரன் குற்றவாளியாகப் பார்க்கப்படவில்லை. கொட்டாரக் கொள்ளையில் அவருடைய பெயர் குற்றப்பத்திரிக்கையில் பதிவும் செய்யப்படவில்லை. ஆனால், இந்தக் கொள்ளையில் எந்த முக்கியப் பங்கும் வகிக்காத செம்புலிங்கத்தைக் கொடூரமானவராகவும் கொள்ளையனாகவும் சித்திரித்துவிட்டனர்.

தொடக்கத்தில் தெரியாமல் கொள்ளையில் ஒரு அங்கமாக இருந்த செம்புலிங்கம் பின்பு தன்னுடைய பக்கம் இருக்கும் நியாயத்தை வெளியில் கூறமுடியாமலே போனது அல்லது அப்பகுதியில் நடக்கும் அனைத்துக் குற்றங்களும் கொள்ளைகளும் செம்புலிங்கத்தின் பேரில் எழுதப்பட்டது.

இது செம்புலிங்கம் மனதில் நீதி குறித்துப் பெரும் கேள்வியை எழுப்பியது. இந்தத் தலைமறைவு வாழ்க்கை அவரை உண்மையில் ஒரு கொள்ளையனாக மாறவைத்தது. அதேநேரம் உண்மை என்பதை விலைக்கு விற்கவும் வாங்கவும் கூடியதாகக் கண்ட அவன் ஏழைகள் பொருட்டுக் கொள்ளை அடிப்பதை தர்மமென நினைத்தான். அவனுடைய தர்ம சிந்தனை அவனை மகிழச் செய்தது என்று  யூ. ஹாப்கின்ஸ் குறிப்பிடுகிறார் (1982:25). செம்புலிங்கத்தின் பின்பற்றும் தர்மம் என்பது தாழக் கிடப்போரைத் தற்காப்பதே தர்மம் என்ற அய்யா வழி கொள்கையுடன் ஒத்து போவதைப் பார்க்க முடிகிறது.

பொதுவாக செம்புலிங்கம் பற்றிய பரப்பப்பட்ட கதைகள் பல அதிகார வர்க்கத்தினராலும் காலனிய காவல்துறையாலும் தங்களின் சுயநலத்துக்காகப் பரப்பப்பட்டது என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

**நாட்டார் பாடல், முச்சந்தி இலக்கியத்தில் செம்புலிங்கம்**

மலையறிவி நாட்டார் பாடல் தொகுப்பு செம்புலிங்கத்திற்கும் காலனிய காவல்துறைக்கும் இடையே நடைபெற்ற நிகழ்வுகளை விரிவாகச் சித்திரித்திருக்கிறது. மேட்டுக்குடிகளுக்கு எதிராக இந்த நிலையில் தங்களில் ஒருவனான செம்புலிங்கம் அவர்களை அவமானப்படுத்துவதையும் தாக்குவதையும் கண்டு மக்கள் மகிழ்ந்தனர்.  தங்கள் மீது அதிகாரம் செலுத்தியவர்கள் எப்படி அதிகாரம் இழந்து செம்புலிங்கம் முன்பு மண்டியிட்டு இருந்ததைக் கண்ட மக்கள் இது சாதாரண ஒரு மனிதனால் செய்யக்கூடிய ஒரு செயல் இல்லை என்று நினைத்தனர். இதனால் தான் செம்புலிங்கம் பற்றிய பாடல்களில் வாய்மொழிக் கதைகளிலும் செம்புலிங்கத்தின் செயல்கள் மீவியல் தன்மை கொண்ட ஒன்றாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

நாட்டார் தெய்வ வழிபாட்டில் உள்ள தெய்வங்கள் பெரும்பாலும் கொலையில் உதித்த தெய்வங்கள்: இத்தெய்வங்கள் ஒரு காலக் கட்டத்தில் மரபான சமூகக் கட்டமைப்பு என்று அதிகார வர்க்கத்தினால் கட்டமைக்கப்பட்டிருக்கும் ஒரு அமைப்பைக் கேள்விக்குள்ளாக்கியதாலும் அல்லது அதில் சிறு மாற்றத்தை ஏற்படுத்தியதாலும் கொல்லப்பட்டிருப்பார்கள். இவ்வாறு கொள்ளப்பட்டவர்களை அவர்களைக் கொன்றவர்கள் அச்சத்தின் காரணமாக வழிபடுவார்கள். இங்கு இரண்டு விடயங்களை நாம் உற்று நோக்கவேண்டியிருக்கிறது. நாட்டார் தெய்வ வழிபாட்டில் கொலையுண்டு தெய்வமானவரின் வீரம், கொடை, அவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கிடைத்தல் என்பது கதைப்பாடல் வழியாகவே வெளிப்படும். அத்தெய்வத்தின் மீது கொண்ட அச்சத்தின் காரணமாக அவர்கள் கொல்லப்பட்டவரைத் தெய்வமாக வணங்குவார்கள்.  இங்கு ஒரு மனிதனுக்கு எதிராக நடைபெற்ற  அநீதிக்கு எதிரான எதிர்ப்புக் குரலுக்கு ஒரே சான்றாக அந்தக் கதைப்பாடல் மட்டுமே இருக்கிறது.  நாட்டார் கதைப்பாடலைத் தவிர்த்து வேறு எந்த இலக்கியங்களிலும் ஆவணங்களிலும் இதைப் பற்றிய செய்தியைக் காண்பது அரிது. இதே போன்று தான் அச்சுப் பண்பாட்டில் பிரதிகளாக வெளிவந்த வாய்மொழி பாடல்களும், முச்சந்தி இலக்கியங்களும் செம்புலிங்கம் போன்ற மக்கள் வீரர்களின் வரலாற்றை வெளிப்படுத்துவதோடு அவர்களின் வீரத்தையும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியையும் காலம் கடந்தும் மக்களிடத்தில் கொண்டு செல்கின்றன. இதனைச் செம்புலிங்கம் விடயத்திலும் காணமுடிகின்றது. (கி.வா.ஜகந்நாதன், 1959 174–186)

**முடிவுரை**

முச்சந்தி இலக்கியங்கள், வாய்மொழிப் பாடல்கள் செம்புலிங்கத்துக்கு வரலாற்று நாயகன், சுதந்திரப் போராட்ட வீரன், மக்கள் வீரன், சமூகம் சார் கொள்ளையர் எனப் பல பரிமாணங்களைக் கொடுக்கின்றன. இந்த இலக்கியங்கள் மூலம் செம்புலிங்கத்தை அவர் வாழ்ந்த சமூகப் பின்னணியில் வைத்துப் புரிந்துகொள்ள முடிகிறது. மேலும் செம்புலிங்கம் பக்கம் இருக்கும் நியாயத்தையும் அவருக்கு நடந்த அநீதியையும் கதைப்பாடல் வெளிப்படுத்துவது போன்று வெளிப்படுத்துகிறது. வரலாற்று நெடுகிலும் எதிர்ப்பின் அடையாளங்களில் ஒன்றாக இருந்த கொள்ளையிடுதல் மரபின் தொடர்ச்சியாகச் செம்புலிங்கத்தின் கொள்ளையைப் பார்க்கலாம். செம்புலிங்கம் பற்றிய மலையாளப் படத்தின் இறுதியில் சொல்வது போன்று இன்றும் நாட்டார் பாடல்களின் வழி செம்புலிங்கத்தின் எதிர்ப்புக் குரல் ஆதிக்கத்திற்கு எதிராகத் தொடர்ந்து முழங்கிக்கொண்டுதான் இருக்கிறது. மேற்கண்ட தரவுகள் அடிப்படையில் பார்க்கும் பொழுது செம்புலிங்கத்தின் கொள்ளை என்பது அதிகார வர்க்கத்தின் கட்டுபாட்டிலிருந்த வெளியை சிறிது காலத்திற்கு மக்களுக்கானதாக மாற்றியிருக்கிறது. இந்த அதிகாரவெளி தலைக் கீழாக்க்கம் தான் செம்புலிங்கத்தை ஒரு மக்கள் கதாநாயகனாக பரிணாம வளர்ச்சியடையச் செய்திருக்கிறது. இந்த செம்புலிங்கத்தின் வரலாறு, வெளியின் அரசியலையும் அதனை மையப்படுத்தி நடத்தப்படும் அரசியலையும், எதிர்புக் குரலையும் தெளிவாகக் காட்டுகிறது.

**துணைநூல் பட்டியல்**

செந்திவேலு, வெ. (2007). *சொக்கத்தங்கம் செம்புலிங்கம் சமூகம் சார் கொள்ளையனின் சாகச வாழ்க்கை [Cokkattangkaṁ Cempuliṅkam camūkam cār koḷḷaiyaṉiṉ cākaca vāḻkkai].* காலச்சுவடு.

வானமாமலை, நா. (1971). *வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப் பாடல் [Vīrāpaṇṭiyak Kaṭṭabommu kataip pāṭal].* நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ்.

ஜகந்நாதன், கி. வா. (1958). *மலையருவி (நாடோடிப் பாடல்கள்) [Malaiyaruvi (Nāṭōṭip pāṭalkaḷ)].* சரஸ்வதி மகால் நூலகம்.

ஹாப்கின்ஸ், யூ. (1982). *செம்புலிங்கம் [Cempuliṅkam].* சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்.